முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் நாள் வியாழக்கிழமை

E.A.No.03/2025
in
E.P.No.40/2015
**in**
O.S.No.304/2008

1. சீதாலட்சுமி
2. மாரியப்பன் ... 2,3 மனுதாரர்கள்/வாதிகள்
3. நல்லதாய்
4. மைனர் நளினிஸ்ரீ
5. மைனர் ஸ்ரீகவினேஷ்

(4, 5 மனுதாரர்களுக்கு கார்டியனும்
தாயாருமான 3 ம் மனுதாரர் மூலம்) ... 4, 5,6 மனுதாரர்கள்/
உத்தேச 4, 5, 6 மனுதாரர்கள்

இராஜேந்திரன் (இறப்பு) ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. ஆவுடையம்மாள் (இறப்பு) ... 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி
2. ராஜேஸ்வரி
3. மகேஸ்வரி
4. பரமேஸ்வரி
5. சரோஜா ... 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்
6. விஜயன்
7. மைனர் அர்ஜீன் ... 5, 6 எதிர்மனுதாரர்கள்/
6, 7 எதிர்மனுதாரர்கள்

(மேற்படி 7 ம் எதிர்மனுதாரருக்கு அடுத்த சிநேகிதரும்
கார்டியனும் தந்தையுமான 6 ம் எதிர்மனுதாரர் மூலம்)

இம்மனுவானது 16.09.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:56:37 +0530

கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.லெட்சுமணன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி காலம்சென்று விட்ட நிலையிலும், 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள் I.A.No.1/2024 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 5ம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து செய்தித்தாள் மூலம் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 5ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தால் 16.09.2025ம் தேதி ஒருதலைபட்சமாக்கப்பட்டும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18 மற்றும் 151-ன்படி, இம்மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி நிறைவேற்றுதல் மனுவை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்** :-

இந்த நிறைவேறுதல் மனுவை 1ம் எதிர்மனுதாரர் மீது நிறைவேறுதல் மனு தபசில் சொத்தினைப் பொறுத்து கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுக்கக்கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி E.A.No.1/2024 and E.A.2/2024 மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி மனுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதை அனுசரித்து அதன் அடிப்படையில் நிறைவேறுதல் மனுவை சீர்திருத்தம் செய்ய வேண்டியது உள்ளது என்றும், இல்லையெனில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடும் என்றும், ஆகையால், இம்மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி நிறைவேற்றுதல் மனுவை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவின் 2 முதல் 4, 6 எதிர்மனுதாரர்கள் I.A.No.1/2024 மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள். 5ம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:56:44 +0530

எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து செய்தித்தாள் மூலம் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் 5ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தால் 16.09.2025 ல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுவானது இம்மனுவில் கண்ட சீர்திருத்தவிபரப்படி நிறைவேற்றுதல் மனுவை சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மேற்படி E.A.No.1/2024 மற்றும் E.A.No.02/2024–ல் இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி பிரதான நிறைவேற்றுதல் மனுவில் இறந்துபோன 1ம் எதிர்மனுதாரருக்கு சட்டப்படி வாரிசுகளான 2 முதல் 7 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்து பிரதான நிறைவேற்றுதல் மனுவை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படதக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

8) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.18 17:56:51 +0530

செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.09.18 17:56:58 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :-**

– இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.09.18 17:57:05 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

E.A.No.03/2025
in
E.P.No.40/2015
in
O.S.No.304/2008

உத்தரவு (Draft / Fair)

நாள் : 18.09.2025